செ.வெ.எண்: 10/ 2021 நாள்: 05.07.2021

# திருப்பூர் மாவட்டம்

## பொது மக்களின் அனைத்து அடிப்படை தேவைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றிட வேண்டுமென அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் அறிவுறுத்தினார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலகக் கூட்டரங்கில், அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், இன்று (05.07.2021) நடைபெற்றது.

***இக்கூட்டத்தில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவிக்கையில்,***

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மேலான ஆணைக்கிணங்க, திருப்பூர் மாவட்டத்தில் அனைத்துத்துறைகளின் மூலமாக வளர்ச்சித்திட்டப்பணிகள் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பொது மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை வசதி, மின்சாரம் உள்ளிட்ட அனைத்து தேவைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றிட வேண்டும். தமிழக அரசின் அனைத்து வளர்ச்சித் திட்ட பணிகளும் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் தங்களது பணிகளை சிறப்பான முறையில் மேற்கொண்டு நமது மாவட்டம் முன்னோடி மாவட்டமாக திகழ வேண்டும்.

மேலும், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள திருப்பூர் மாநகராட்சி, 5 நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் மற்றும் 13 ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் திட்டப்பணிகளும், இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்தும் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் துறை வாரியாக ஆய்வு மேற்கொண்டார். மேலும், பொது மக்களுக்கு எவ்வித தங்குதடையுமின்றி சீரான முறையில் குடிநீர் வழங்குவது குறித்து அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து சரியான முறையில் திட்டமிட்டு குடிநீர் பற்றாக்குறையினை தீர்ப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளவும், நீர் உள்ள இடங்களைக் கண்டறிந்து தேவையான இடங்களில் புதிய ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கும், பழுதடைந்த ஆழ்துளை கிணறுகளை சரிசெய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அலுலவர்களுக்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்களிடம் டாடா பவர் நிறுவனத்தின் சார்பில் ரூ.5.00 இலட்சம் மதிப்பிலான ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை அரசு மருத்துவமனைகளின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாநகராட்சி ஆணையாளர் திரு.கிரந்தி குமார் பாடி இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சாகுல்ஹமீது, துணை ஆட்சியர்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**